# ஒருங்கிணைந்த சேவை மையம் பணிக்கு பெண்கள் விண்ணப்பிக்கலாம்

**நாகர்கோவில், டிச.16–**

ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனையில் இயங்கும் ஒருங்கிணைந்த சேவை மையத்தில் பணிக்கு பெண்கள் விண்ணப்பிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குமரி மாவட்ட கலெக்டர் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியிருப்பதாவது:

சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் கீழ் தனியார் மற்றும் பொதுஇடங்களில் வன்முறையால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ஆதரவளிக்கும் நோக்கில் சகி என்ற சிறப்பு திட்டமான ஒருங்கிணைந்த சேவை மையமானது கன்னியாகுமரி அரசு மருத்துவமனை வளாகத்தில் 10.11.2020 முதல் தலைமை அலுவலகமானது 24 மணி நேரமும் இயங்கி வருகின்றது.

ஒருங்கிணைந்த சேவை மையத்திற்கு பல்நோக்கு உதவியாளர் மற்றும் இரவு காவலர் ஆகிய இரண்டு பணியிடங்கள் முற்றிலும் தற்காலிகமாக தொகுப்பூதிய அடிப்படையில் பூர்த்தி செய்யப்பட உள்ளது. இதற்கு கன்னியாகுமரி மாவட்டத்தில் வசிக்கும் கீழ்கண்ட தகுதி வாய்ந்த பெண்களிடமிருந்து மட்டுமே விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

கீழ்கண்ட பதவியில் சுழற்சி முறையில் பணிபுரிய பணியாளர்கள் நியமனம் செய்யப்பட உள்ளது. அதன்படி, மல்டி பர்பஸ் ஹெல்பர், 10ம் வகுப்பு பாஸ், சமையல் தெரிந்திருக்க வேண்டும். காலியிடம் 1. கார்ட், 10ம் வகுப்பு பாஸ், காலியிடம் 1. தகுதியான பெண்கள் விண்ணப்பிக்கலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை மாவட்ட சமூகநல அலுவலர், மாவட்ட சமூகநல அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக இணைப்பு கட்டடம், தரைதளம், கன்னியாகுமரி மாவட்டம் 629001 என்ற முகவரிக்கு பதிவு தபாலில் 21.12.2023 அன்று பிற்பகல் 5.45 மணிக்குள் அனுப்பி வைக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.